# பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய ரூ.3,00,000/- லஞ்சம் கேட்டு ரூ.1,00,000/- முன்பணமாக பெற்ற தாசில்தார் கைது

புகார்தாரர் திரு.கருப்பையா, காரைக்குடி தாலுகா, சிவகங்கை மாவட்டத்தில் வசித்து வருகிறார். இவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார், இவர் தான் புதிதாக வாங்கிய நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய ராஜசிங்கமங்கலம் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.தென்னரசு, தாசில்தார், ராஜசிங்கமங்கலம் தாலுகா அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் விண்ணப்பத்திற்கு பட்டா வழங்க தனக்கு லஞ்சமாக ரூ.3,00,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இராமநாதபுரம் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் மனு சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 05.10.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.தென்னரசு, தாசில்தார், புகார்தாரரிடமிருந்து லஞ்ச முன்பணமான ரூ.1,00,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.